# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 நளி (15-12-89) ஓர் உருபா (இதழ் எண்: 132)


# இந்தியாவில், எ'து எப்படியிருந்தாலும், நேரு குடும்ப வழிமுறை ஆட்சி- பார்ப்பனீயத் தலைமை ஆட்சி- அடியோடு விழுந்தது என்பதே, இப்பொழுதைக்கு நாம் கொள்ளும் ஆறுதல் நிலை!

## தலை மட்டும் வேறு; உடம்பு, கை, கால்கள் வேறு வேறு. இவ்வாறான ஓர் இந்திய தேசிய ஆட்சிதான் இன்றைய முன்னணி ஆட்சி!

தேர்தல் முடிந்து இந்தியத் தேசிய முன்னணி அரசும் அமைந்து, இந்தியத் தலைமை-யமைச்சராக விசுவநாத பிரதாப் சிங்கும் (வி. பி. சிங்கும்) பதவியில் அமர்ந்து, அவரும் அவர் அமைச்சரவையைச் சார்ந்த அமைச்சர்கள் பலரும் செயல்படத் தொடங்கி விட்டனர். சில பல நல்ல திட்டங்களையும் அறிவித்த வண்ணம் உள்ளனர்.

நம்மைப் பொறுத்த மட்டில், நாம் விரும்பு கிறோமோ இல்லையோ, மக்கள் விரும்புகிறார்களோ இல்லையோ, மக்களின் பெரும்பான்மை முயற்சியால் தேசிய முன்னணி அரசு பல்வேறு சிக்கல்களுக்-கிடையில், ஒருவாறு அமைந்து விட்டது. இதன், அறிவிக்கப் பெற்ற கொள்கைகளின் வலிவும், செயற்பாடுகளும் அவற்றின் நன்மை தீமைகளும் இனி போகப் போகத்தான் தெரிய வரும். என்றா-லும் இவ்வரசின் அடிப்படைகளைப் பற்றியும், அதன் பருமவளர்ச்சி பற்றியும் நாம் ஓரிரு கணிப்புக் கருத்துகளைக் கூற வேண்டுவது நம் கடமையாகிறது,

(தொடர்ச்சி 3- ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# விடுதலை விரும்பிக்குத் தந்தை விடுத்த விடை!

மடல் : 2

சென்னை-5.
11-2-1989

பேரன்பின் இனிய மகன் பொழிலுக்கு!
நலமே விளைக.

இம்மடல் நான் எழுதும் இரண்டாவது நீண்ட கருத்து மடல்.

என் முதல் மடலுக்கு – அஃதாவது மடல்தாளில் எழுதிய நீண்ட மடலுக்கு—நீ எழுதிய விடையைப் பார்த்ததும், உனக்கு இனிமேலும் மடல்கள் எழுதி என் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று கூட எண்ணம் வந்தது. அந்த அளவில், உன் மடல்களுள், நான் ஏற்கனவே தென்மொழி, தமிழ்நிலம் வாயிலாக எழுதிய விளக்கக் கட்டுரைகளைக் கண்டும், படித்திருந்தும், நீ இன்னும் பலவகையான ஐயப்பாடுகளை எழுதிக் கொண்டிருக்கிறாயே, அந்த நிலையில் மேலும் மேலும் நான் அதே கருத்துகளை திரும்பத் திரும்ப எழுத வேண்டி வருகிறதே என்றுதான் அந்த எண்ணம் தோன்றியது.

ஆனால், பின்னர் அது படிப்படியாக மறைந்து அம் மடல் கருத்துகளுக்குத் தெளிவான விடையெழுத வேண்டும் என்ற எண்ணம் வலுப் பெற்றது.

என்ன இருந்தாலும் நீ நான் மதிக்கின்ற ஒரு மகனாக உயர்ந்து நிற்கின்றாயே! உன் அறிவுணர்வும் தொண்டுள்ளமும் தூய்மையான—நேர்மையான—இயக்கவுணர்வும் நான் விரும்புகிற அளவில்—நான் எதிர்பார்க்கின்ற வகையில் அமைந்து கிடக்கின்றனவே! அந்த நிலைகளுக்காக உனக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் எத்துணைப் பெரிதாக வேண்டுமானாலும் மடல்களை, நீ விளக்கம் பெற்று அக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளும் வரையில், எழுதிக் கொண்டிருக்க முனைந்தேன். இம் மனவுணர்வுகளை உனக்குத் தெரிவிக்காமல் கூட இருக்கலாம். ஆனாலும் என் உள்ளத்தைக் கனியச் செய்யும் அளவுக்கு நீ தகுதி பெற்றிருக்கிறாய் என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், அத்தகைய உணர்வு உன் பொதுத் தொண்டுக்கு எருவாகவும், ஊற்றமாகவும் அமையக் கூடியது என்பதற்காகவும் எழுதினேன்.

பொதுவாகவே என் ஒவ்வோர் உணர்வு வெளிப்பாடும், பொதுநலம் கருதியதாகவே இருக்கின்ற நிலையை 35 ஆண்டுகளுக்கு முன்பே நான் பெற்று விட்டேன். அதன் விளைவாக, நான் மிகவும் இளையோனாக இருந்த நிலையில், என் தனி நலம் கருதி, உன் அன்னையாருக்கெழுதிய இருநூறுக்கும் மேற்பட்ட காதல் மடல்களைக் கூட 1954-ஆம் ஆண்டின் இறுதியில், கிழித்துப் போட்டு விட்டேன். ஆனால் அதற்காகக் கூட பின்னர் வருந்தினேன். அவையும் என் உள்ள உணர்வுகளின் இனிமையைப் படம்பிடித்துக் காட்டியனவாகவே இருக்குமே—அவற்றையும் எதிர் காலத் தமிழ் இளைஞர்க்காக வைத்திருக்கலாமே—என்று எண்ணிப் பார்த்ததாலேயே அவ் வருத்தம் வந்தது.

இதையெல்லாம் எதற்காக இங்கு எழுதினேன் என்றால், நம் மடல்களில் கூட நாம் என்றென்றும் மாறாத கருத்துகளையே சிந்தித்து எழுத வேண்டும் என்பதற்காகவே ஆகும். உன் மடல்களும் பெரும்பாலும் அவ்வாறிருப்பது, எனக்கு, நான உன்மேல் வைத்த பெருத்த நம்பிக்கைக்கு அடித்தளமாக அமைகின்றது. அதுவும் நான் உன்னை எண்ணி மகிழ்வதற்கோர் உணர்வுக் காரணமாகும்! இஃது இவ்வளவில் நிற்க.

பொழில்! விலைமதிக்க முடியாத, என்னுள் ஊறிக்காழ்த்துக் கனன்று கொண்டிருக்கும்—அறிவுணர்வுகளை வெளிப்படுத்தாதபடி, புறச் செயல் நிலைகளில் சிக்கிக் கொண்டிருக்கிறேனே என்று எண்ணி வருந்தாத நேரமே இல்லை என்று சொல்லலாம். ஆனால், அவை வீணாகப் போய் விடுவதாக எண்ண வேண்டாம். மறதிக்குள்ளோ, மாய்வுக்குள்ளோ உட்படும் அறிவுணர்வுகளல்ல அவை. நிலத்துள் புதைந்து கிடக்கும் வயிரங்களைப் போன்றனவும், நிலத்துக்குள் ஓடிக் கொண்டிருக்கும் அல்லது மூடிக் கொண்டிருக்கும் ஊற்றுக் கண்களைப் போன்றனவும் ஆகும், அவை. எப்பொழுது சுரங்கம் தோண்டினாலும், அல்லது மண், கற்களைப் பறித்துப் போட்டாலும் அவை எப்பொழுதும் வெளிப்பட அணியமாக உள்ளவை.

அவை இப்பொழுது வெளிப்படாததால்—வெளிப்படுத்த முடியாத சூழ்நிலைக்கு ஆட்பட்டிருக்கின்றனவே தவிர, அவை எப்பொழுதும் அழியாதவை; என்றும் இருப்பவை. கண்களைத் திறந்து பார்க்காத வரையில், எவ்வாறு காட்சி தெரிவதில்லையோ—அதுபோல் அவற்றை வெளிப்படுத்தாத வரை அவை அடையாளம் அல்லது உருவம் தெரியாதவை. எனவே அவை அழியாதவை. அவை என்னுள் இல்லை, என் வழியாக வெளியேறக் காத்திருக்கின்றன; அவ்வளவுதான், அவற்றிற்கும் எனக்குமுள்ள தொடர்புகள். அவை என் வழியாக வெளி வர வேண்டிய காலத்தில், இடத்தில், நேரத்தில் கட்டாயம் வெளி வந்தே ஆகும். ஒருவேளை என்னினின்று அவை வெளிவராமல்—அவ்வாறு வெளிவராத முன்னரே—நான் இல்லாமற்போவேனானால்—என்னளவுக்கு அறிவுணர்வைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் இன்னொருவர் வழி-

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதற்கண், எ'து எப்படியிருந்தாலும், இந்தியாவில் கடந்த நாற்பத்திரண்டாண்டுகளாக, நேருவின் குடும்ப வழிமுறை (பரம்பரை) ஆட்சி—பார்ப்பனியத் தலைமை ஆட்சி—அடியோடு விழுந்தது என்பதே இப்பொழுதைக்கு மனநிறைவும் ஆறுதலும் தருகின்ற ஒரு நிலையாகும் என்பதை யாருமே மறுக்க முடியாது. வீட்டிற்குள் புகுந்த நச்சுப் பாம்பை எப்படி வெளியேற்றுவது என்பதே கடந்த காலத்தில் அனைவரின் கவலையாக இருந்தது. நேரு மறைமுகமாகக் குடிநாயகம் என்னும் முறையில் செய்து வந்த அவரின் குடும்ப ஆட்சி முறைக்கான அடிப்படைச் செயற்பாடுகளை, அவரின் மகள் இந்திரா இலை மறைவு காய் மறைவாகச் செய்து கொடுங்கோல் ஆட்சி முறையை நடத்தி வந்தார். அவருக்குப் பின்னர் அவரின் அருந்தவப்(!) புதல்வன் இராசீவோ வெளிப்படையாகவே அத் தில்லு முல்லுகளைச் செய்து யாருக்கும் அயராமல், எவர் கருத்தையும் ஏற்றுக் கொள்ளாமல், தமக்கு உரிய தந்திர மந்திரங்களோடு, இந்திய வரலாற்றிலேயே இதுவரையிலும், இனி மேலும் எவரும் நடத்தத் துணியாத ஒரு கொள்ளைக் கொலைகாரக் கொடுமையாட்சியையே நடத்தி வந்தார். அவரின் ஐந்தாண்டுக் கால ஆட்சியில் இந்தியாவில் ஏற்பட்ட அரசியல், பொருளியல், குமுகாய வீழ்ச்சிகளை இன்னும் ஐம்பதாண்டுக் காலத்திலும் தீர்க்க முடியாத வகையில், ஒரு வல்லதிகார வரட்டாட்சி அவருடையது என்றால், உண்மையிலேயே அதில் மிகையான உணர்வோ, கருத்தோ இருக்க முடியாது. மொத்தத்தில் மூச்சு முட்டிப்போன ஆட்சி எப்பொழுது முடியும் முடியும் என்று மக்கள் காத்திருந்ததுபோல் அவர் கழுத்தைப் பிடித்து வெளியேற்றியுள்ளனர், அவராட்சியால் நேரிடையாகத் தாக்குண்டு வெறுப்படைந்த வடநாட்டு மக்கள்! எனவே, இந்த வகையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தை நாம் இரு கை கூப்பி வரவேற்று வாழ்த்துச் சொல்கிறோம்.

ஆனால், முந்திய ஆட்சியின் அழுத்தத்தை அடியோடு பெயர்த்தெறிந்த இந்தத் தேசிய முன்னணி ஆட்சியின் உயிர்ப்பு நிலையைத்தான், நாம் இப்பொழுதைக்குப் போற்றிக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம் என்பதை மிக வருத்தத்துடன் குறிப்பிட வேண்டி உள்ளது. **'தேசிய முன்னணி'** என்னும் பெயர் கொண்ட ஒரு கதம்பக் கட்சியின் ஆட்சியே,இப்பொழுது அமைந்துள்ளது. அதில் பங்கு கொண்டுள்ள பிற கட்சிகளையும் அவற்றின் கொள்கை, கோட்பாடுகளையும் நுண்ணிதாக ஆராய்ந்து பார்த்தால், தலை மட்டும் வேறாகவும், உடம்பு, கை, கால்கள் வேறுவேறாகவும் அமைந்த ஓர் உயிர்ப் படைப்பின் ஆட்சியாகத்தான்,இப்பொழுதைய தேசிய முன்னணியின் ஆட்சி அமைந்துள்ளதாக நாம் கருதலாம்.

இதில் பங்கு கொண்டுள்ள ***சனதா தளம், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி***,வலது பொதுவுடைமைக் கட்சியான ***மார்க்சியப் பொதுவுடைமைக்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், தெலுங்கு தேசக்கட்சி,எக்டேவின் சனதாக் கட்சி, அசாமின் மகந்தா கட்சி***, ஆகிய ஏழு கட்சிகளும், தேசிய முன்னணிக்கு வெளியே நின்று ஆதரவு தருவதாகக் கூறும் அத்வாணி, வாச்பேயி முதலிய தலைவராகக் கொண்ட பாரதீய சனதாக் கட்சியும் இராசீவுக்கு எதிராக ஏற்பட்ட உணர்வடிப்படையில் அமைக்கப் பெற்ற ஆட்சியே வி. பி. சிங் கின் தலைமையில் அமைந்த எதிர்கட்சிகளின் முன்னணி ஆட்சியாகும்.

மேற் கூறிய அதிகார முறையில் அமைந்த ஏழு கட்சிக் கூட்டணியில் உள்ள எக்டே கட்சிக்கும், மகந்தா கட்சிக்கும் கலைஞர் கருணாநிதியின் தி. மு. கழகத்திற்கும் பாராளுமன்றத்தில் ஓரிடமும் கிடைக்காமற் போனது, முன்னணிக்கு ஏற்பட்ட மாபெரும் இழுக்கும் இழப்பீடும் ஆகும். மற்று, தெலுங்கு தேசக் கட்சிக்கோ 'குப்புற வீழ்ந்தும் மீசையில் மண் படியவில்லை'—எனும்படி இரண்டு இடமே கிடைத்ததும் இழுக்கில்லாவிடினும் ஓர் இழப்பே ஆகும். மற்றபடி, முன்னணியில் பங்கு கொண்டுள்ள இடது, வலது பொதுவுடைமைக் கட்சிகள் இரண்டிற்கும் பாராளுமன்றத்தில் கிடைத்துள்ள இடங்கள் வரலாற்றிலேயே அக் கட்சிகள் இதுவரை பெற்ற பெருமைகளுக்கெல்லாம் மேலான பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளன என்று மகிழ்ச்சியோடு கூற முடியா விட்டாலும் வருத்தமில்லாமல் குறிப்பிடலாம். இனி, எல்லாவற்றுக்கும் மேலாக உலகத்திலேயே பெருத்த ஊழல் கட்சியான முந்தைய இந்திரா பேராயத்திற்கு, இப்பொழுது தலைமையமைச்சராகவுள்ள வி. பி. சிங்கின் தலைமையில் உள்ள சனதா தளத்திற்குக் கிடைத்த 141 இடங்களை விட அதிகமாக 51 இடங்கள் கிடைத்து, அது மிக வலிவான எதிர்கட்சியாக அமைந்திருப்பது, ஆட்சிக்கு அவ்வளவு நல்ல எதிர்காலம் இல்லை என்று மிக வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியதாக உள்ளது. அத்துடன், 88 இடங்களைப் பெற்றுள்ள பச்சை வெறிப் பார்ப்பனக் கட்சியான பாரதீய சனதா கட்சி, இன்றைய ஆளுங் கட்சிக்கு அடுத்த படியாக உள்ளது இன்னும் பெரும் வருத்தத்திற்குரிய சூழ்நிலையையே புலப்படுத்துவதாக உள்ளது. கொஞ்சம் வடிவப் படுத்தி விளக்கமாகச் சொல்வதானால் முன்னணி அரசுக்கு முன்னே உள்ளது **கோவேறு கழுதை**யான இந்திரா பேராயக் **கட்சி** பின்னே உள்ளதோ **நாட்டுக் கழுதை**யான பாரதீய சனதாக் **கட்சி!** ஆக **'முன்னே போனால் கடிக்கும், பின்னே**

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# செய்திகள், உரைகள், செயல்கள்!

'இராம சென்ம பூமி' தொடர்பாக, இறுதி இறுதியாக ஒரு விளம்பரத்திற்கு உருபா 4 கோடி செலவிட இருந்தது இராசீவ் அரசு! நல்லவேளை அதிகாரிகளின் எச்சரிக்கையால் தவிர்ந்துபோனது.

—இராசீவ் அரசின் தில்லி அதிகாரி ஒருவர்.

இராசீவின் ஊழல் அரசுக்கு வடபுலத்து மக்கள் தகுந்த பாடம் கற்பித்திருக்கிறார்கள். இருந்தாலும் வடக்கில் உள்ள மக்கள் உணர்ந்த அளவுக்கு இராசீவ் அரசின் ஊழல்களைத் தென்புலத்து மக்கள் உணரவில்லை. அதுதான் இந்திரா பேராயத்திற்குத் தென் மாநிலங்களில் கிடைத்த வெற்றிக்குக் காரணம். வடக்கே பேராயக் கட்சியை வீழ்த்தியது போலத் தெற்கிலும் வீழ்த்துவோம். —துணைத் தலைமையமைச்சர் தேவிலால் சென்னைச் செய்தியாளர்களிடம்.

போபர்சு தகரி (பீரங்கி) தாகு ஊழல் தொடர்பாகப் புதிய அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

—பழைய தலைமையமைச்சர் இராசீவ் புதுத்தில்லிச் செய்தியாளர்களிடம்.

நல்ல நடைமுறைகளைக் கொண்ட வி. பி. சிங். தலைமையமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

—முன்னாள் குடியரசுத் தலைவர் சஞ்சீவி (இரெட்டி) பாராட்டு.

தேர்தல் செய்திகளைத் தொலைக்காட்சியில் உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவிக்கும் முயற்சியில் 6,700-க்கும் மேற்பட்ட தொலைபேசி இணைப்புகள், 40 தொலைச் செய்தித் (டெலக்சு) தொடர்புகள், 800 நேரடித் தொலைபேசி வசதிகள், 80 தொலைச் செய்தித் தட்டச்சு (டெலிபிரிண்டர்) வசதிகள் பயன்படுத்திக் கொள்ளப் பெற்றன. இவற்றுக்காக ஏறத்தாழ 2 கோடி உருபா செலவிடப்பட்டுள்ளது.

—செய்தி.

ஒப்போலைச் சாவடிகளில் இந்திரா பேராய வேட்பாளர்களின் முகவர்கள் மக்கள் முத்திரையிடும் இடத்திற்குச் சென்று, கைக் குறிக்கு முத்திரையிடும்படி வற்புறுத்தினார்கள்.

—உச்சநெறிமன்ற வழக்கறிஞர் குழுவின் ஆய்வறிக்கை.

இராசீவ் அரசின் தவறான கொள்கைகள் காரணமாக, இந்திய — இலங்கை உறவுகள் சீர்குலைந்தன. எனவே அவற்றைத் திரும்பப் பெற வேண்டும் என்று தேசிய முன்னணி அரசை தி.மு.க. வலியுறுத்தும்.

—மு. கருணாநிதி. தில்லிச் செய்தியாளரிடம்.

இந்திரா பேராய அமைச்சரவை கலைக்கப் பட்ட பின், நடுவண் அமைச்சகங்களில் உள்ள கோப்புகள், பதிவுகள், ஆவணங்கள் அனைத்தும் அழிக்கப் படவோ, திருத்தப் படவோ விட்டுவிடக் கூடாது. இதைப் புதிய அரசு இவ்வாறு நடந்தனவா என்பதை ஆராய வேண்டும்.

—உச்சநெறி மன்ற முன்னாள் நடுவர் வி.ஆர்.கி.

தெற்கு மாநிலங்களில் வகுப்புக் கொள்கை கலப்பற்ற காந்தி வளர்த்த (!) இந்திய தேசியம் வெற்றிபெற்று இருக்கிறது. வடபுலத்தில் குறிப்பாக இந்தி மாநிலங்களில் மதக் கலப்புடைய இந்து தேசியம் வெற்றிபெற்று இருக்கிறது.

—ம. பொ. சி. அறிக்கை.

நடுவில் இராசீவ் அமைச்சரவை பதவி விடுப்புச் செய்ததைப் போல் புதுவையிலும் இந்திரா பேராயம் அமைச்சரவை பதவியில் இருந்து விலகலாம் என்று தெரியவருகிறது. —செய்தி.

இமாச்சல மாநிலத்தில் இந்திரா பேராயம் தோற்றதற்கு, அம் மாநில முதல்வர் வீரபத்திர சிங்கைப் பதவி விலக இராசீவ் கட்டளையிட்டார். ஆனால், அவர், என் மாநிலத்தில் தோற்றதற்கு நான் பொறுப்பில்லை. இராசீவே முழுப் பொறுப்பு. அவரின் கொள்கைகளும் அவர் சாய்காலும் (செல்வாக்கு) சரிந்து விட்டதே காரணம்' என்று கூறி விட்டார். —செய்தி.

தலைமையமைச்சராக வி. பி. சிங். பதவியேற்ற பின், அவரிடம் செய்தியாளர்கள், 'நீங்கள் பாதுகாப்பு எதுவும் இல்லாமல் எல்லாரிடமும் பொதுவாகப் பழகுகிறீர்களே! இதே நிலை தொடருமா?'' என்று கேட்டனர். அதற்கு அவர் மிகவும் சுருக்கமாக, 'நான் மக்களின் தலைவன்' என்று விடையளித்தார். —செய்தி.

போபர்சு தகரித் தொடர்பாக இடைத்தரகர்களுக்குக் கொடுத்த கையூட்டுப் பணத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப் பெறும். இது தொடர்பாகக் கையூட்டு வாங்கியது யார் என்பதைக் கண்டு பிடிக்க அரசு முயற்சி செய்யும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கும்போது, யாரையும் பழி வாங்கும் வகையில் அரசு நடந்து கொள்ளாது. அதே சமையம் அந்த ஊழல் பணத்தில் ஒரு பகுதியை முன்னாள் தலைமையமைச்சர் இராசீவ் வாங்கியிருந்ததாகக் கண்டுபிடிக்கப் பெற்றால், நாட்டின் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

துபாயின், 'கலீசு டைம்சு' இதழில்

—வி. பி. சிங். நேருரை.

இப்போதைய இலங்கைக் குடியரசுத் தலைவர் பிரேமதாசா நேர்மை மிக்கவர்; 'கண்ணியமானவர் தமிழ் மக்களுக்குக் கடந்த காலத்தில் இழைத்த கொடுமைகளை அவர் ஒப்புக் கொண்டார். ''முன்பு செய்த அதே தவறை மேலும் செய்யக் கூடாது.

புதிய அணுகு முறை வேண்டும். இல்லாவிட்டால் அழிவுதான் நேரும். தமிழ் மக்களுடன் நீண்ட நாள் போர் நடத்த முடியாது;'' என்னும் எண்ணம் கொண்டுள்ளார்.—விடுதலை புலிகளின் அரசியல் கருத்தாளர் பாலசிங்கம், கொழும்பில்,

காலிசுத்தானே தங்கள் இறுதி நோக்கம்; வேறு எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

—அர்மிந்தர்சிங்சந்து—பொதுச் செயலாளர், அனைத்து இந்திய சீக்கிய சம்மேளனம்.

அதிகாரம் என்பது மக்களுக்குத் தொண்டு செய்யக் கிடைத்த கருவி என்று நினைக்காமல், தங்களை வளப்படுத்திக் கொள்ளக் கிடைத்த வாய்ப்பாகவே கருதப்படும் போக்கு இந்தியாவில் மட்டுமல்லாமல் மூன்றாவது உலக நாடுகள் அனைத்திலுமே காணப்படுகிறது. இதனால் தம் தேர்தல் வாயுறுதிகளை நிறைவேற்ற தலைமைப் பொறுப்பிலிருப்பவர்கள் எவ்வளவுதான் முயன்றாலும்,பொதுத் தொண்டுக்காக அல்லாமல் வேறு காரணங்களுக்காகக் கட்சியில் சேர்பவர்களால் அந்த முயற்சி தோற்றுப் போகிறது.

—டெய்லி முசுலிம்-பாக்கித்தான் செய்திஇதழ்.

திராவிட இயக்க உணர்வைக் கைவிடாதவர்கள் (அ. தி. மு. க விலிருந்து) யார் வந்தாலும் தம் கட்சியில் சேர்த்துக் கொள்ளப் பெறுவார்கள். அந்த அடிப்படையில்தான் சத்தியவாணி முத்து, ஆலடி அருணா, சேலம் கண்ணன் போன்ற பலர் சேர்த்துக் கொள்ளப் பெற்றிருக்கிறார்கள்.

—கருணாநிதி-செய்தியாளர்களிடம்.

அரசில் ஊழல் நிறைந்த, திறமையற்ற அதிகாரிகளுக்குக் கட்டாய ஓய்வு கொடுப்பேன்... ஊழலற்ற தூய்மையானவர்களுக்கே அமைச்சர் பதவி கொடுப்பேன். —உத்திரப்பிரதேச சனதாதள முதல்வர் முலாயம் சிங் யாதவ்.

தேசிய முன்னணி ஆட்சி நிலையில்லாதது. அது பாரதீய சனதாவோடு முரண்பட்ட கருத்துகளைக் கொண்டுள்ளது எனவே வி. பி. சிங் அமைச்சரவை அதிக நாள் நீடிக்கும் என்று சொல்ல முடியாது.

சனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி. புதுவைச் செய்தியாளர்களிடையில் (4-12-89)

இந்திரா பேராயக்கட்சி ஒன்றினால் மட்டுமே நடுவில் நிலையான அரசைத் தரமுடியுமெனத் தென் மாநில மக்கள் கருதியதால், தமிழகத்தில் தி.மு.க.வுக்குத் தோல்வி ஏற்பட்டுள்ளது.

—மு.கருணாநிதி. தில்லிச் செய்தியாளர்களிடையில் (29-11-89)

சாதியக் கட்சிகளின் ஆதரவினால்தான் கேராளாவில் 20 இடங்களில் 17 இடங்களைக் கைப்பற்றி, இந்திரா பேராயக் கட்சித் தலைமையிலுள்ள 'ஐக்கிய சனநாயக முன்னணி' வெற்றி பெற்றுள்ளது

—கேரள முதல்வர் ஈ. கே. நாயனார். திருவனந்தபுரம் செய்தியாளர்களிடையில். (29-11-79)

நடுவில் இராசீவின் ஊழல் அரசு அடியோடு சரிந்து விட்டது. பெரும் ஊழல்களை மூடி மறைக்கப் பெரும் பொய்களைக் கூறி வந்துள்ள இராசீவ் அரசை இனியும் நம்ப மாட்டோம் என்று மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள் .. நாடு விடுதலை பெற்று நாற்பதாண்டுகளுக்கு மேலாக நடுவண் அரசு ஒரே அரசியல் கட்சியின் ஆட்சியிலும் ஒரே குடும்பத்தின் பிடியிலும் (ஒரு சிறிய இடைவெளி நீங்கலாக) இருந்து வந்துள்ளது. இத் தேர்தலுக்குப் பிறகு நேரு வழிமுறையினரின் ஆட்சிக் காலம் முடிவுறுவதுடன், நடுவில் கூட்டாட்சிக் காலமும் தோன்றியுள்ளது. —தினமணி. ஆசிரியவுரை. (28-11-89)

அரசியல் அமைப்பியல் சட்ட முறைகள் எவ்வளவு சிறந்தனவாக இருந்தாலும், சரியான உணர்வுடன் அவை நடைமுறைப் படுத்தப் பெறவில்லையானால், அவை வெற்றி பெற முடியாது... இதுவரை இராசீவ் செய்த செயல்கள் அரசியல் சட்ட அமைப்பின் வாசகங்களை மீறவில்லை என்பதாக வெளிக்குத் தோன்றினாலும், அவை ஞாயத்திற்கும் குடிநாயகத்திற்கும் எதிரானவை; மாறானவை.

—குல்திப் நய்யார்.—புதிய அரசின் முகாமைப் பணிகள்—எனும் கட்டுரையில்.

## இராசீவிற்கு இருந்த பாதுகாப்பு அமைப்பு

முன்னாள் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதை யடுத்து, அடுத்த தலைமையமைச்சராகப் பதவியேற்ற இராசீவுக்குப் பாதுகாப்புத் தருவதற்குப் பெரிய அமைப்பே உருவாக்கப் பெற்றிருந்தது. ஏறத்தாழ 1500 பாதுகாப்பு வீரர்கள் கொண்ட தனிச் சிறப்புக் காவல் படை,குண்டு துளைக்காத 20 மகிழுந்துகள், அவருடைய இல்லத்தைச் சுற்றிலும் 13 காவல் சாவடிகள் என வலிவான பாதுகாவலுடன்தான் அவர் இருந்து வந்தார். அவரது இல்லத்தை நோக்கி அமைந்திருந்த ஒரு விண்மீன் விடுதியின் மாடியிலுள்ள பலகணிகள் கூட அவர் பாதுகாப்பின் பொருட்டு மூடப்பட்டு விட்டன. அந்த விடுதியின் மாடியில் பாதுகாப்புப் படையினர் நிறுத்தப் பட்டிருந்தனர். உயர் காவல்துறை அதிகாரிகள் பலர் கொண்டதாக இந்தஅமைப்பு இருந்தது.

இவ்வளவு மிகப்பெரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஒவ்வொரு நாளும் பல இலக்கக் கணக்கான உருபா செலவழிக்கப் பட்டது.

அவர் இதுவரை தில்லியில் உள்ள குதிரைப் பந்தயச் சாலையில் உள்ள ஒரு வளமனையில் குடியிருந்தார் இனிமேல் தில்லியருகில் மெஃருலியில் உள்ள அவரின் சொந்தமான பண்ணை வீட்டுக்கு இடம் மாற இருக்கிறார்.

—செய்தி.

# சீன மாணவர்களின் போராட்டமும் அமெரிக்காவின் திட்டமிட்ட சூழ்ச்சியும்!

உழைக்கிற மக்களின் ஆட்சி சோவியத்து ஒன்றியத்திலும், மக்கள் சீனத்திலும், புரட்சிக்குப் பின் அமைந்தது.

அதுவரை அங்கு முதலாளிகள், நிலக்கிழார்களின் நலன்களுக்காகவும், பிற வல்லரசுகளின் நலன்களுக்காகவுமே நடந்து கொண்டிருந்த ஆட்சி அதிகாரங்கள் அம் மக்கள் ஆட்சியினுல் தூக்கி எறியப்பட்டன.

சோவியத்து—இலெனினுடைய தலைமையிலும், சீனம்-மாவோவின் தலைமையின் கீழும் மிகப் பெரும் புரட்சிகளைச் செய்து முடித்தன.

ஆனால் அப்புரட்சியின் வெற்றி என்பது உழைக்கும் மக்களின் ஆட்சியின் கீழ் வல்லரசிய ஆளுமை தங்கள் நாடுகளில் முற்றாக ஒழிக்கப் பட்டதும், தங்கள் நாடுகளில் உள்ள முதலாளியர்கள் மிகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டதுமே ஆகும்.

ஆக, அப் புரட்சி என்பது முடிவுற்றது அன்று.

தொடர்ந்து அவ் வுழைக்கும் மக்கள் அமைப்பு, தன் நாட்டு முதலாளியத்தின் மீது கடுமையான போர் தொடுத்துக் கொண்டே, அனைத்து மக்களுக்கும், திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற சம்பளம் என்கிற அடிப்படையில் ஓர் ஒப்புரவியத்தையும் (சோசலிசத்தையும்), அதன் பின்னர் அனைத்து மக்களுக்கும் திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற சம்பளம் என்கிற அடிப்படையில் ஒரு பொதுவுடைமை அமைப்பைத் தன் நாட்டில் மட்டும் அல்லாமல், உலகில் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிற அனைத்து மக்களுக்கும் உதவுகிற வகையில் வேலை செய்வதே தன் வேலையாகக் கொள்ள வேண்டும்.

ஆனல், சோவியத்து ஒன்றியத்தைப் பொறுத்த வரையில், அ்து இலெனின், இசுடாலின் காலத்திற்குப் பின் படிப்படியாக உதட்டளவில் ஒப்புரவியத்தை (சோசலிசத்தை)ப் பேசிக் கொண்டு, செயலளவில் முதலாளியமாக வளர்ந்து, அன்றைய முதலே ஒரு குழுக வல்லாளுமையாகப் பிற ஏழை நாடுகளைச் சுரண்ட திட்டமிட்டுச் செயல்படத் தொடங்கி விட்டது.

மூன்றும் உலக நாடுகளுக்குக் கொடிய அணுமின் நிலையம் என்கிற மக்களைக் கொல்லுகிற திட்டம், போர்க் கருவிகளை விற்பனை செய்து, அதற்குப் பகரமாக அந் நாடுகளில் உள்ள உழவு, விளைச்சல் பொருள்களைச் சுரண்டிக் கொண்டு செல்வதெல்லாம், அந்த உதட்டளவு ஒப்புரவியத்தின் நடைமுறையாகி விட்டது.

சோவியத்தில் உள்ள பல சிறு தேசிய இன மக்களின் உரிமைகளைப் பிடுங்குவது, அவற்றை நசுக்குவது, உரிமை கேட்கிற ஆட்களைக் கொல்லுவது இவையெல்லாம் சோவியத்து குழுக-வல்லரசின் இன்றைய கொடுங்கோன்மைகளாகும்.

இதற்கு 'மறுசீரமைப்பு', 'குடிநாயகப் படுத்தல்' என்கிற போர்வையைப் போர்த்துகிறது கொர்பச்சேவ் அரசு.

மூன்றும் உலக நாடுகளில் உள்ள புரட்சிக்கு எதிர்ப்பாளர்கள், இந்தியாவில் உள்ள பார்ப்பன-மேல் சாதிய இந்திய வெறி அரக்கர்கள்-சோவியத்தின் இன்றைய மறு சீரமைப்புக்குத் தாளம் தட்டத் தானே செய்வர்!

இதே போன்று, மக்கள் சீனத்திலும், மாவோவின் புதிய குடியாட்சி, மக்கள் பண்பாட்டுப் புரட்சிக்குப் பின்,

'டெங்'—கும்பல் 'புதின மயமாக்கல்'-என்கிற போர்வையில் முதலாளியத் தன்மைகளைச் சீனத்தில் அதிகம் புகுத்தினர்.

அதன் மூலம், மக்களுக்கு ஒப்புரவியத்தைப் பற்றியோ பொதுவுடைமையைப் பற்றியோ சரியாகக் கற்பிக்காமல், தொடர்ந்து சீன முதலாளியத்திற்கு எதிராகப் போராடி ஒப்புரவியத்தை நிலை நாட்டுகிற செயல்பாடுகளைச் செய்யாமல் போனது.

மேலும், இச் சூழலில், அமெரிக்க முதலாளியர்களின் மூலபபணங்களுக்கும், அவர்களின் உருவாக்கப் பொருள் விற்பனைச் சந்தைக்கும் சீனத்தில் வழி திறந்து விட்டது.

இதை வாய்ப்பாகப் பயன்படுத்தியது அமெரிக்க வல்லரசு.

உலக ஒப்புரவிய நாடுகளைச் சீர்குலைக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்த அமெரிக்க வல்லரசுக்கு இ்து ஓர் எளிய வழியாக இருந்தது.

முதலாளியப் பண்பாட்டை,—ஒழுக்கக்கேடான சீரழிந்த பண்பாட்டுக் கலவைகளைச் சீனத்தில் திருட்டுத்தனமாகவும், வெளிப்படையாகவும் புகுத்தியது—அந்த அமெரிக்க வல்லரசு.

'மடியில் ஓணனைக் கட்டிக் கொண்டு, குடைவதாகக் கூறிய கதையைப் போன்றே சீன அரசு ஓலமிட்டது.

இந்நிலைகளுக்கு இடையில்தான் சீன மாணவர்கள் மேலும் நிறைய (சீரழிவுக்கான) உரிமை வேண்டும் எனப் பலவாருக'குடிநாயகம் வேண்டும்' என்கிற போர்வையில் போராடி வருகின்றனர்.

Scanned with CamScanner

அவ்வளவுதான்...

இந்தியாவில் உள்ள பிற்போக்கு, பார்ப்பன பிற மேல்சாதிய இந்திய வெறியர்கள் ஓலமிடத் தொடங்கி விட்டனர்.

'பொதுவுடைமை அனைத்ததிகாரம் (சர்வாதிகாரம்) ஒழிய மாணவர்கள் போராடத் தொடங்கி விட்டனர்' என்றும்- 'குடிநாயக அரசுதான் ஏற்றது என்று சீன மாணவர்கள் போராடத் தொடங்கி விட்டனர்'—என்றும் ஓலமிட்டனர்!

மாணவர்கள் பலர் சீனப் படையினரால் கொல்லப்பட்ட போது எதிர்த்துக் குரல் கொடுத்தே இவர்கள் இப்படிக் கதறினார்கள்.

ஆனால்—

*1965*-இல் தமிழ்நாட்டில் இந்தி மொழி திணிக்கப்பட்டுத் தமிழக மக்கள் இரண்டாந்தரக் குடி மக்களாக மாற்றப்பட்டபொழுது எழுந்த தமிழ் மாணவர் போராட்டத்தின் மீது—இந்திய அரசு நடத்திய வெறித் தாக்குதலைக் கண்டித்தோ,

*1975—76*-களில் அசாமில் 'இந்திய நாய்களே வெளியேறுங்கள்'—என்று அசாமிய எண்ணெய் வளங்களை எல்லாம் சுரண்டிச் சென்ற இந்திய வெறி அரசைப் பார்த்து அசாம் மாணவர்கள் போராடிய போது, அன்றைய இந்திய வெறி அரசின் 'அரக்கி'யான இந்திரா' அசாம் மாணவர்களை எல்லாம் சுட்டுப் பொசுக்கி, அசாமில் குருதி வெள்ளத்தை ஓடச் செய்ததைக் கண்டித்தோ,

*1984*-இல் இந்திரா சுடப்பட்டபோது, காவல் செய்த சீக்கியர்கள்தாம் சுட்டனர் என்று பொய்ப் புரளி விட்டதோடு இல்லாமல், தில்லியில் இருந்த சீக்கியர்கள் ஆயிரக்கணக்கினரை தில்லித் தெருக்களிலேயே ஓட ஓடச் சுட்டுக் கொலை செய்தனரே அதைக் கண்டித்தோ,

இந்த இந்திய வெறி அரசுக்குக் காவடி தூக்கும் ஆண்டை வகுப்பினர்,

எந்தவோர் எதிர்ப்பும் தெரிவித்தது இல்லை.

இரண்டாம் நிலைக்கு ஆன பிற இன மக்களின் அழிப்பைப் பொருட்படுத்தியது கூட இல்லை.

ஆக,

சீனத்தில் மட்டும் அன்று, இந்தியாவிலும் இந்தியாவின் வல்லாளுமைக்கு உட்பட்ட தமிழ்நாடு, தெலுங்குநாடு, பஞ்சாபி நாடு—போன்ற நாடுகளில் கூட முதலாளியத்திற்கோ, வல்லரசுகளுக்கோ எதிராக—ஆளும் கூட்டங்களுக்கு எதிராக—புரட்சி நடப்பதையோ,

புரட்சியாளர்களை எதிர்க்கும் சீரழிப்பாளர்களை ஒடுக்குவதையோ —

ஆளும் வகுப்பினர் பொறுத்துக் கொள்ளவே மாட்டார்கள்.

அவர்களின் வெறி —

தங்களின் ஆளுமையை மக்கள் மீது திணித்து, மக்களைச் சாக்காட்டுக்குட்படுத்துவதே ஆகும்.

இதை விளங்கிக் கொண்டு நாம், இவர்களை இனங்காண்பதோடு, நம் தமிழ்நாட்டு மக்களின் மீதான இந்த ஆண்டை வெறிக் கூட்டங்களுக்கு எதிராகப் புரட்சி செய்தே ஆக வேண்டுமாய் உறுதி கொள்வோம்.

—விடுதலை விரும்பி.

## தமிழக விடுதலை பெற்றிடுவோம்!

அன்புள்ள ஐயாவுக்கு வணக்கம்.

தங்கள் மடல் கண்டு மிக்க மகிழ்ச்சி. நமது தமிழினப் பணியும், கருத்துப் பரப்புதலும் *தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு* மூலமாகச் செயல்படுகின்றன. தமிழினத்தில் சிறிய விழுக்காட்டு மக்களுக்கே தெரியும். மேலும் தமிழினம், அரசியல், சாதிப் பிரிவுகளால் பிரிக்கப்பட்டு, அதில் மட்டுமே, மக்கள் அக்கறை கொண்டுள்ளனர். ஆகையால் நம் கருத்துகள் தமிழகத்தின் அனைத்து மூலைமுடுக்கிலும் எதிரொலிக்க ''**தமிழக விடுதலைப் போராட்டம்**'' தொடங்குதல் வேண்டும். இந்தப் போராட்டம் முதலில் 'அமைதியாக' அஃதாவது ஊர்வலங்கள், உண்ணாநோன்பு, இந்திப் புறக்கணிப்பு, நடுவண அரசு செய்திப் புறக்கணிப்பு போன்ற பல்வேறு போராட்டங்களாக நடைபெறுதல்வேண்டும்? இது நமது கருத்துப் பரப்பும் செயலாகும். இப் போராட்டங்களுக்குப் பொருளுதவி செய்ய செல்வர்களை அணுகி அவர்களின் ஆதரவைப் பெறுதல் வேண்டும். ''தமிழக விடுதலை'' எதற்காக என்பதை மக்களுக்கு மிகத் தெளிவாக உணர்த்துதல் வேண்டும்.

இப்பணியினை விரைவே தொடங்கித் தமிழக விடுதலைக் கொள்கையை உயர்த்தித் தமிழகத்தில் போராட்டம் தொடங்க வேண்டும்.

''தமிழக விடுதலை'' விரைவே பெற்றிடுவோம்.'' பம்பாய்த் தென்மொழி உறுப்பினர்கள் அனைத்து வகையிலும் உதவுவோம்.

உங்கள் அன்புள்ள
**தமிழரசன்**, பம்பாய்.

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். O

Scanned with CamScanner

# தலைமையமைச்சரானதும் வி. பி. சிங். அறிவித்துள்ள சில நல்ல கொள்கைகள்!

1) வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ள முடியாததைக் கமுக்கமாகச் செய்யக் கூடாது... எனவே ஒளிவு மறைவற்ற புதிய ஆட்சி முறை நடைமுறைப் படுத்தப் படும் என்று உறுதி கூறுகிறேன். அரசியல் கமுக்க(இரகசிய)க் காப்புறுதிச் சட்டம், நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் இல்லாத வகையில் தளர்த்தித் திருத்தியமைக்கப் பெறும். செய்திகளைத் தெரிந்து கொள்ளும் உரிமை, வாழ்வடிப்படை (ஜீவாதார) உரிமையாக அரசியல் சட்டத்தில் சேர்க்கப் பெறும்.

2) தொலைக்காட்சி, வானொலிக்குத் தன்னாட்சி வழங்கப் பெறும். (அரசின் விளம்பரக் கருவிகளாக அவை பயன்படுத்தப் பெறா.) (இந்த இரண்டு கொள்கைகளும் முகாமையானவை. கடந்த இராசீவ், இந்திரா ஆட்சித் தலைமைகளின் போது, உண்மைகளை மூடி மறைப்பதே ஒரு கொள்கையாகக் கடைப் பிடிக்கப்பெற்று வந்தன என்பதை நாம் மறந்துவிட முடியாது. அதனால் ஊழல் குற்றச் சாட்டுகள் பற்றிய உண்மைகள் மறைக்கப் பட்டன. அத்துடன் அவற்றை அடியோடு மறைத்தும், மறுத்தும் பொய்யான புலனங்கள் (தகவல்கள்) நாடாளு மன்றத்திலேயே கூட அன்றைய ஆட்சித் தலைவர்களால் தரப்பெற்று வந்தன. அவற்றுக் கேற்றபடி தலைமையமைச்சரின் புகழ் பாடும் கருவிகளாகவும், அவர்களுடைய எதிரிகளையும், எதிர்க் கட்சிகளையும் திட்டித் தீர்க்கிற, தூற்றுகிற விளம்பரக் கருவிகளாக மட்டுமே தொலைக் காட்சியும், வானொலியும் பயன்படுத்தப் பெற்று வந்தன. இவற்றை உள்ளிருந்து பொறுத்துக் கொள்ள முடியாத படி மனச்சான்றுகள் உறுத்தினாலும், அவற்றின் அடிப்படையான உண்மைகளை வெளிப்படுத்த முடியாமல், நேர்மையான அதிகாரிகள், அரசியல் கமுக்கப் பாதுகாப்புறுதிச் சட்டத்திற்கு அஞ்சி, வாய் திறவாமல் செயல்பட வேண்டியிருந்தது. இந்த நிலையை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் வி. பி. சிங். கருத்தறிவித்திருப்பது அவரின் உண்மைக்கும் நேர்மைக்கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.)

3) பொதுவாழ்வில் அறநெறிகள் (தார்மிக நெறிகள்) மீறப்படுவதைத் தவிர்க்கவும், தடுக்கவும் **நாட்டு மன்றம்** (லோக் பால்) என்னும் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப் பெறும். அதன் உசாவலுக்கு நாட்டின் தலைமையமைச்சர் கூட உட்படுத்தப் பெறுவார்.

(மேலிடத்துப் பதவியாளர்களை ஞாய மன்றம் உசாவமுடியாது என்று இந்திரா காலத்தில் அமைத்த சட்டம் இன்று நடைமுறையில் உள்ளது. அதனால் அவர்கள் செய்யும் ஊழல்கள், குற்றங்களை வெளிப்படையாக அறமன்றத்தில் வழக்குப் போட்டுத் தட்டிக் கேட்க முடியாமல் இருக்கிறது. இந்த நிலையை வி. பி. சிங். தகர்த்தெறிந்து, தவறு செய்யும் போது, தலைமையமைச்சரையும் உசாவலுக்கு ஆளாக்கும் வகையில் **நாட்டு மன்றம்** (லோக் பால்) ஒன்றை உருவாக்க விரும்புகிறார்.

4) நாடாளுமன்றம், அறமன்றம், தேர்தல் அதிகாரத்துக்குழு உள்ளிட்ட குடிநாயக அமைப்புகள் ஆகியவற்றின் தன்னதிகார ஆட்சிமுறை பாதுகாக்கப் பெறும்.

(இது வரை இவ்வாறான அற முறை அமைப்புகள் மதிப்பிழந்து போகுமாறும், இவற்றின் நடவடிக்கைகள் ஒருவகைச் சடங்குகளாக நடைபெறுமாறும், ஆட்சித் தலைவர்கள் அவற்றின் செயல் முறைகளில் தலையிட்டு அவற்றை நெறி பிறழச் செய்யவும் தடம் புரளச் செய்யவும், அவர்களின் ஊழல்களுக்கும் குற்றங்களுக்கும் துணையாக இருக்கும்படியும் இருந்து வந்துள்ளன என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

5) இராசீவின் ஐந்தாய அரசு (பஞ்சாயத்து இராஜ்)த் திட்டம் ஒருவகையான போலித் திட்டம் என்பதை உணர்ந்து, சிற்றூர்ப் புறத்துக்கும் அதிகாரங்களைப் பரவலாக்க அதை வேறு வகையாகப் பயன்படுத்தலாம் என்று எண்ணி, உண்மையான அதிகாரப் பரவலுக்கு வகை செய்யும் வகையில் முறையான ஐந்தாய அரசுத் திட்டம் கொண்டு வரப்படும்.

அதனால், சிற்றூர்ப் புறங்களில் வளத்தைப் பெருக்கி, வறுமை காரணமாக மக்கள் நகர்ப்புறங்களில் குடியேறுகின்ற இப்பொழுதைய நடைமுறையை மாற்றியமைப்பதற்கு மொத்த முதலீட்டில் 50 விழுக்காடு வேளாண்மை மற்றும் சிற்றூர்ப்புறத் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கப் பெறும்.

6) பாக்கித்தான், சீனா போலும் அண்டை நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்தி, அதன் விளைவாகக் கருவிப் போட்டிகளைத் தவிர்த்து, அந்தத் துறையில் செலவிடப் பெறும் ஏராளமான தொகை, அரசின் பொருளியலைச் சீர்ப் படுத்தவும், பிற வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதுமான பொருள் முதலீடு செய்யவும் பயன்படுத்தப் பெறும். அத்துடன் அயல் நாடுகளிலிருந்து வரைமுறையின்றிக் கடன் வாங்கும் போக்கு நிறுத்தப் பெறும்.

—இத்தகைய நல்ல கோட்பாடுகளைத் தம் தொலைக்காட்சி உரையுள் வி. பி. சிங். கூறியுள்ள தொடக்கம் மிகவும் வரவேற்கத் தக்கதாகும். பல வகையான கருத்துப் போராட்டங்களிடையில், அவர் தலைநிமிர்ந்து இவற்றையும் இன்னபிற திட்டங்களையும் செயல் படுத்துவாரானால், அவரை அவ்விடத்தினின்று யாராலும் அசைக்க முடியாது என்பது உறுதி. O

Scanned with CamScanner

# உங்கள் மடல்கள்!

## விடுதலை விரும்பிக்குத் தந்தை விடுத்த விடையின் மேல் ஒரு தடை!

தமிழ்ப் பேரறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, வணக்கம்.

முந்தியவர்கள் செய்தவை அனைத்தும் தவறானவை என்று, முந்திய வளர்ச்சியின் பயனாக எழுந்து நிற்கின்ற பிந்தியவர்கள்—இளைஞர்கள்—எண்ணுவது உலக வழக்கு.

இனி, தெரியாதனவற்றைத் தெரிந்து கொண்டு விட்டதாக எண்ணிக் கொண்டு, எடுத்துக் காட்டாக, மார்க்சியத்தைத் தெரிந்து கொள்ள முயலாமலேயே தெரிந்து கொண்டு விட்டதாக எண்ணிக் கொண்டு, மார்க்சியம் தெரிந்தவர்களாகத் தாங்கள் எண்ணிக் கொண்டிருப்பவர்களைக் கண்மூடிப் பின்பற்றுவதும் அல்லது கண்ணைத் திறக்கச் சொல்பவர்கள் 'மீது எரிச்சல் கொண்டு இழிமொழி பேசி அதிர்ச்சிக்குள்ளாக்குவதும் கூட இளைஞர்களுக்கு இயல்புதான்!

மார்க்சியர்களால் திருக்குறளைப் புறக்கணிக்க முடியாது என்பது எனது பணிவான கருத்து.

எ'து எப்படியிருப்பினும், தாங்கள் பொழிலனுக்கு எழுதிய மடலை 30-11-89 *தமிழ் நிலத்*தில் வெளியிட்டது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. அளவுக்கு மீறிப் பாராட்டுவதும் தவறு, தனியாக எடுத்துச் சொல்ல வேண்டுவனவற்றை பொது இடங்களில் சொல்லிக் காட்டுவதும் தவறு!

பொழிலனுக்கு இப்பொழுது தேவை, தன் முனைப்புத் தணிந்த அறிவு நாட்டம்; மார்க்சிய அறிவு நாட்டம். அதற்குக் கடினமான—மிகக் கடினமான உழைப்புத் தேவை.

முடிந்தால், "வாழ்க்கையின் கேள்விகள்" நூலின் 30 பக்கங்களையேனும் பார்க்கவும்.

அன்புடன், —சோதிப்பிரகாசம், சென்னை-4.

## "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

அன்பு ஐயா, வணக்கம். இதழ் எண் 131-கண்டேன்; மிக்க மகிழ்ச்சியே. விடுதலைவிரும்பிக்குத் தந்தை விடுத்த விடையைப் படித்தேன்; சுவைத்தேன்; மெத்தவும் மகிழ்ந்தேன். தாங்கள், தமிழ் பேசும் மக்கட்கெல்லாம தந்தை நிலையில் உள்ளீர்கள். பொழிலுக்குத் தாங்கள் உரைத்த அறிவுரை, தக்க சமயத்தில் உரைத்த, தக்க உரையேயாம்! இவ்வுரை-என் அறியாமையை நீக்கியது என்னைப் போலும்; எண்ணற்ற தமிழ் இளைஞர்களின் அறியாமையையும் நீக்கும்.

—*நா. அழகப்பத் தமிழன்* அரியக்குடி. 623202-

## அச்சகம் அன்று: படைக்களம் அது!

நமது தலைவர்கள், தலைமைகளில்—பெரும்பாலோர் அனைவருமே — வணிகக்கடை நடத்தும் வியாபாரிகளாகத்தான் தோன்றுகின்றனர். உண்மையான 'மக்கள் நலம்', 'மக்கள் சிந்தனை' அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இந் நிலையில்—உண்மையான மக்கள் நலம் வேண்டியும், இன நலம் வேண்டியும் ஒலிக்கும் குரல்கள் ஆங்காங்கே ஒலிக்கச் செய்கின்றன. அந்த ஒலிப்பில் மார்க்சிய ஒலியினையும், தனித்தமிழ்ச் சிந்தனைகள் வாய்ந்த ஒலியினையும் தமிழர் நலம் பற்றிய வேகமான ஒலிகளையும் கேட்க முடிகிறது. இவ்வாறு தனித்தனியாக நின்று செயல்பட்டு வரும்—நல்லெண்ணம் கொண்டோரெல்லாம் ஒரு பொதுவான உண்மைக் கருத்தை உணர்ந்தாதல் வேண்டும்.

அது யாதெனில், இதுபோன்ற உண்மையான மொழிநலம், இன நலம் வாய்ந்த சிந்தனை ஒலிப்புக்களுக்கும், செயற்பாடுகளுக்கும், வித்தும் விதையுமாயும், முதலும் மூலமுமாயும் நின்று விளங்குவது '*தென் மொழி*'யும் கால்நூற்றாண்டு காலத்திற்கு முன்னதாக ஓங்கி ஒலித்த அறிவுலகப் பேராசான் *பாவலரே*றின் தனித்த '*குரலு*'ந்தாம் என்பதை நாம் நன்குய் உணர்ந்தாதல் வேண்டும்.

இன்றுவரை தொடர்ந்து—செய்துவரும் '*தென் மொழி*'—'*தமிழ் நிலத்*' தறியில் – தங்களை எல்லாம் பின்னிப் பிணைத்துக்கொண்டு—ஒருருவாய்-நாமனைவரும் வெளிப்பட்டு எழுந்து நின்றால்—உறுதியாய், இம் மண்ணில் நாம் எண்ணிய வற்றைச் செய்ய முடியும் என்பது எனது துணிவான கருத்து.

நாயகனாய்ப் பாவலரேறை வைத்து—நாமெல்லாம் சுற்றி நின்று — "தென் மொழியைத்" '*தமிழ் நிலத்தை*'—படைக்கலனாகக் கொண்டு—செயற்பட்டாக வேண்டும். அச் சூழல் ஏற்பட உழைப்பதே, நமது சிந்தனையாளர் மன்றத்தின் நோக்காக — கொள்கையாக — மூச்சாக இருத்தல் வேண்டும்.

அய்யா பாவலரேறின்—உணர்வின் ஊற்றுக் கண்ணைத்'*தமிழ்நிலம்*'இதழ்(131-இன்)வாயிலாகத் தெளிவாய் உணரலாம் அதில், அய்யா அவர்கள் தம் பிள்ளை பொழிலுக்குத் தீட்டியுள்ள விடைமடல், பொழிலுக்குத் தீட்டியது மட்டுமன்று, நம் எல்லோருக்குந் தீட்டியதுதான். நாமெல்லோரும் அய்யாவின் அன்புப் பிள்ளைகளே!! மீண்டும் ஆழப்படித்து—உள்ளத்தில் இறுத்தல் வேண்டும்.

தென்மொழியின் அச்சகத்தை '*அச்சகம்*' என்று எண்ணாதே! ஒரு '*படைக்களம்*' என்று எண்ணு!!.—என்று முழக்கமிடுகிறார் பெருஞ்சித்திரனார். "ஆம் அது" அச்சகமன்று! படைக்.

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**போனால் உதைக்கும்**' என்ற நிலையே, இப்பொழுது ஆட்சியில் அமர்ந்துள்ள தேசிய முன்னணியின் இக்கட்டான நிலை என்று சொன்னால் குற்றமாகி விடாது.

பாராளுமன்றத்தில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் குணநலன்களோ வேடிக்கையானவை; வியப்பானவை.

இந்திரா பேராயமோ உலகிலே இல்லாத ஊழலும், ஏமாற்றும், புரட்டும் மலிந்த பார்ப்பனர்களும் வணிகர்களும் முதலாளிகளும் நிறைந்த கட்சி. பாரதீய சனதாவோ மதவெறியும் தேச வெறியும் மிகுந்த கட்சி. இரண்டு பொதுவுடைமைக் கட்சிகளும் ஒன்றோடொன்று ஒட்டாதன. அ.தி.மு.க.வோ இந்திரா பேராயத்தின் கைத்தடி! வேறு எந்தக் கட்சியும் வலிவான கட்சியாக இல்லை. பிற அனைத்தும் உதிரிக் கட்சிகள்.

இவற்றில் எவற்றை நம்பி சனதா தளம் முன்னணி அமைத்துள்ளதோ அதற்குத்தான் வெளிச்சம்! ஆனால், எப்படியோ மக்களுக்கு ஆட்சியில் ஒரு மாறுதல் தேவைப்பட்டது. வடநாட்டு மக்கள் தென்னாட்டு மக்களை விட இராசீவால் மிகுதியும் தாக்குண்ட உண்மை விளங்கியவர்கள். எனவே இராசீவ் கட்சியைத் தூக்கியெறிந்தார்கள். ஆனால் அதே சமயத்தில், அவர்கள் மதவெறியின் அடிப்படையில் பாரதீய சனதாவையும், ஊழல்கள், பணம், அடாவடித்தனம் ஆகியவற்றின் அடிப்படையில் சில இடங்களில் இந்திரா பேராயத்தையும் வெற்றி பெறச் செய்துள்ளது, இன்னும் அவர்கள் அரசியல் முதிர்ச்சி பெற வேண்டும் என்பதையே காட்டுகிறது.

இனி, தென்னக மாநிலங்களில்—ஆந்திரா, கருநாடகம், தமிழ்நாடு, கேரளத்தில் பேராயக் கட்சியும், அ.தி.மு.க. போன்ற பிற கவர்ச்சி, மத வெறி அடங்கிய கட்சிகளும் சேர்ந்து—மாநிலக் கட்சிகளை மண்கவ்வச் செய்திருப்பது, அம் மாநில மக்கள் இன்னமும் தில்லி ஆட்சியையே நம்பிக் கொண்டுள்ளனர் என்பதையே காட்டுகிறது. அஃதாவது இம்மாநிலங்களில் இன்னும் தேசிய உணர்வு வலுப் பெறவில்லை என்பதையே காட்டுகிறது. அவ்வாறு தென்னக மக்களிடையில் தேசிய இனவுணர்வு தோன்றாமல் இருக்கும்படி அம் மாநிலங்களில் உள்ள ஒப்போலைக் கட்சிகளே காரணமாக இருக்கின்றன என்பதை இத் தேர்தலின் முடிவுகள் நன்கு உணர்த்தி விட்டன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் இங்குள்ள தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய திராவிடவுணர்வுக் கட்சிகளின் வல்லாளுமைகளினாலேயே, தமிழின உணர்வு பரவாமல் உள்ளது என்பது தெளிவு. **இரண்டு கட்சிகளும் கவர்ச்சிக் கட்சிகளே! இன நலத்தையோ, மொழி நலத்தையோ அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் அல்ல. தி.மு.க. அரசியல் கவர்ச்சிக் கட்சி; அ.தி.மு.க. திரைப்படக் கவர்ச்சிக் கட்சி.** இவற்றுடன் திண்டிவனம் இராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சி முழுக்க முழுக்க சாதி வெறிக் (உணர்வு என்று கூட சொல்ல முடியாது.) கட்சியே! இன்னும் சொன்னால் எல்லாக் கட்சிகளிலுமே அரசியலுணர்வு கால் பங்கு தான் இருக்கும். சாதியுணர்வே முக்கால் பங்கு உள்ளது.

இந்நிலையில், ஆட்சி அமைத்துள்ள தேசிய முன்னணி, பாராளுமன்றத்தின் அறுதிப் பெரும்பான்மையைப் (263) பெற விரும்பினால், தனக்குள்ள 141 இடங்களுடன் இன்னும் 122 இடங்களையும், சட்ட வரைவுகள், சட்ட நீக்கங்கள் முதலியவற்றைச் செய்ய வேண்டிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை (350) பெற விரும்பினால், இன்னும் 209 இடங்களையும் பெற வேண்டும். பாராளுமன்றத்தில் இந்திரா கட்சிக்கும் அதன் இணைவுக் கட்சியான அ.தி.மு.க. வுக்கும் கிடைத்துள்ள 203 இடங்கள் போக மீதியுள்ள இடங்கள் (இப்பொழுதைய நிலையில்) 135 இடங்களே. ஆக, இந்திரா பேராயமும் அ.தி.மு.க.வும் மனம் வைத்தால் அல்லது ஆட்டங்காட்ட விரும்பினால், வி. பி. சிங். ஆட்சி, மற்ற உதிரிக் கட்சிகள், தனியார்கள் அனைவரையும் இணைத்து அணைத்துப் பிடித்துக் கொண்டாலும், தனக்குள்ள அறுதிப் பெரும்பான்மையை மெய்ப்பிப்பது இயலவே இயலாது. இனி, இவர் ஆட்சிக்கு வந்த தொடக்கத்தில் கூறியுள்ள சில சட்டத்திருத்தங்களையும் மாற்றங்களையும், (ஒலி, ஒளி—தன்னாட்சி, போபர்சு நடவடிக்கை, மேற்பதவியாளர்களின் உசாவல் நடவடிக்கை முதலியவற்றைச்) செய்வதற்குரிய மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையை எப்படிப் பெறுவது? 'முரட்டுப் பெண்ணும் சுருட்டுப் பாயும்' கதைதான்! என்னதான் நடக்கிறதென்று கொஞ்சம் விட்டுப் பார்த்தால்தான் தெரியும். O

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

களம் தான்! அந்தப்படைக்களம் ஒன்றுதான்—நம்மைப் போன்றவர்களைக் கூர்மை செய்திட முடியும். அந்த நாயகனின் குரல் மட்டும்தான் நம்மை எல்லாம் கட்டிப்போட்டு ஒன்றாக்க முடியும்'' என்ற சூழலை உருவாக்க வேண்டும்.

— பாவலர். தமிழ்க்கனல், கண்டிதம்பட்டு.

## நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்கிறோம்!

விடுதலை விரும்பிக்குத் தந்தை விடை 'தமிழ் நிலத்தில்' படித்தோம்' தாங்கள் தெரிவித்துள்ள கருத்தை நூற்றுக்கு நூறு விழுக்காடு ஏற்றுக் கொள்கின்றோம். நனி நன்றி! தங்கள் அன்புமறவா,

— வ. வேம்பையன், கல்பாக்கம்-603102

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக வெளிப்பட்டே தீரும். ஆனால் என் வழியாக வெளியேறினால் அவற்றுக்கு என் பெயர் கொடுக்கப் பெறும்; இன்னொருவர் வழியாக வெளியேறினால், இன்னொருவர் பெயர் கொடுக்கப் பெறும். நெய்வேலியில் நிலக்கரி உள்ளது என்று கண்டு பிடிக்கப்படும் வரை—அதைச் சுரங்கம் வெட்டி வெளிக் கொணரும்வரை—அந் நிலக்கரி, நிலத்துள்ளே இருந்து கொண்டுதானே இருந்தது. அது கண்டு பிடிக்கப்பட வேண்டிய தேவையின் அடிப்படையில்—அக் காலத்தில்—கண்டு பிடிக்கப் பட்டது; பின்பு வெட்டி வெளிக் கொணரப் பெற்றது.

நம் அறிவுணர்வு நெய்வேலி நிலம் போல்—நிலக்கரியை விளைவித்து வைத்திருப்பது போல்—அறிவை வெளிக்கொணரும் வகையில் அதைக் கீழே புதைத்து வைத்துள்ளது, இயற்கை! அது வெளிப்படும் நேரத்தில்-ஒரு தேவையின் அடிப்படையில்-வெளிப்படும். எனவே அதற்குரிய நேரம் இன்னும் வரவில்லை என்பதாகவே நான் அமைந்திருக்கின்றேன். என் செய்வது? நாம்தாம் அந்நேரத்தை உருவாக்க முடியவில்லையே. நாம் அனைவரும் நம்மை உருவாக்கிக்கொள்ளவே நேரம் போதவில்லை. அந்த வகையில் நானும், என்னைச் சுற்றியுள்ளவர்களும் அந்த நேரத்தை உருவாக்கிக் கொடுக்கவில்லையே! நாம் என் செய்வது? நம்மை விளங்கிக் கொள்ளாத எவரும் நமக்குத் துணையாக இருக்க இயலாது தானே! ஆனால் நாம் நம்மை விளக்கப் படுத்திக் கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. கடந்த 35 ஆண்டுகளில் நம்மை நாம் போதுமான அளவில் அதற்கு மேலாகவும்கூட விளக்கப் படுத்திக் கொள்ளவில்லையா? அதன் பயனாக நம்மை உறவர்கச் சுற்றியுள்ளவர்களிடத்திலும், இனமாகச் சூழ்ந்துள்ளவர்களிடத்திலும் நாம் என்ன பயன் பெற்றோம்? ஒன்றுமில்லையே! ஒரு செடி விளைய வித்தூன்றி விட்டு, நாம் அதற்குத் தண்ணீர் விடவில்லை; எரு போடவில்லை என்றால், அவ் விதை எவ்வாறு செடியாவது? மரமாவது? பயன் தருவது?

எனவே நாம் இக்கால் இதழ் ஆக்கங்களிலேயே அதுவும் அவற்றின் வழி நம் கருத்தைப் பரப்புவதற்கே இவ்வளவு உழைக்க வேண்டியுள்ளதென்றால், அது நம குறையன்று. நம்மை விளங்கிக் கொண்டும், தந்நலத்தாலும், அறியாமையாலும் நெளிந்து கொண்டிருக்கும் நம்மைச் சுற்றியுள்ளவர்களினதும், நம் இனத்தினதும், நம் அரசினதும் குறையாகும். அவர்கள் தேவையான அளவில் அகத்தும் புறத்தும் நம்மைப் புரந்திருப்பார்களாயின், நாம் அஃதாவது நான், இன்னும் மிகுந்த அளவில் ஆக்கங்களை—வெறும் வெற்றிலக்கியங்களை மட்டுமன்று—அறிவாக்கங்களை வெளிக் கொணர்ந்திருக்க முடியும். ஆனால், நானேவன்றோ என் மூச்சு முட்டுமாறு-சூழ்நிலைகளையெல்லாம் வென்றெடுத்து—எதிர்த்து நின்று போராடி—முடிந்த அளவு வெளிக் கொணர வேண்டியுள்ளது. எனவே, இங்குள்ள நிலைகளையும், நீங்களெல்லாம் இயங்கிய இயக்கத்தால் நேர்ந்த இடையூறுகளையும் முட்டுப்பாடுகளையும், துன்பங்களையும் இயலாமைகளையும் உணர்ந்து கொள்ளாமல், வெறுமனே, நீ, "தங்களின் அளவிடற்கரிய அறிவு சார்ந்த ஒவ்வொரு நிமையமும், நம் இதழ்களை வெளியாக்க அச்சுக் கருவியுடன் செலவிடுவதில் வருத்தமும், அதை விட தங்கள் நேரத்தை மிகு பயனுடைய-பிற—இலக்கிய, இயக்க ஆக்கப் பணிகளில் செலவிடலாம் எனும் அக்கறையும் கொண்டே அதை அங்ஙனம் எழுதினேன்"...என்று உன் மடலில் எழுதியுள்ளாய். நீ எதற்காக எழுதினாய் என்பதும், இன்னும் எழுதாமல் என்னென்ன நினைத்திருக்கின்றாய் என்பதும், அதன் மேலும் நீ என் அளவில் என்னென்ன நினைப்பாய் என்னென்ன சொல்லுவாய் என்பதும், அதே போல் பிறர் அளவில் என்ன என்ன நினைப்பாய்—கருத்துகளைச் சொல்லுவாய் என்பதும் எனக்குத் தெரியுமடா கண்ணு! ஆனால், தெரிந்து என்ன பயன்? அவற்றைச் சொன்னால் நீயே நம்பாமற்போகும் பொழுது நான் என்ன செய்துவிட முடியும்? அறிவுக்குக் கட்டளையிடுவது பெரிதன்று. அறிவைப் பின்பற்றி நடப்பவர்களைக் கண்டு பிடிப்பதும், அவ்வாறு அவர்களை நடத்துவிப்பதும் பெரியது; மிகப் பெரியது. 'எனை வகையான் தேறியக் கண்ணும் வினை வகையான் வேறுகும் மாந்தர் பலர்' என்று திருவள்ளுவர் சொல்வதும் இதைத்தான். மார்க்சு சொன்னதென்ன இக்கால் அவரைப் பின்பற்றுபவர்களாகத் தங்களைச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் நடப்பது என்ன—என்பதை எண்ணிப் பார்த்தாலேயே இது உனக்கு விளங்கி விடும். இனி, அறிஞர்களைக் கண்டு கொள்வதும், அவர்களைப் பேணுவதும், அவர்களுக்கு ஒத்த உறவுகளாக நடந்து கொள்வதும், இவ்வுலகில் மிக மிக அரிய செயலாகும் என்றும் திருவள்ளுவர் கூறுவார். 'அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப் பேணித் தமராக் கொளல்' என்பது அவர் கூற்று.

இனி, உன் 6-1-89 ஆம் நாளைய மடலில், இவ்வடிப் படையை உணர்ந்து கொள்ளாமல், சில குறைகளையும் குறிப்பிடுகிறாய். அவை:

"ஆயினும், இச் சிந்தனையின் எல்லை மக்களினத்துக்கு — தமிழ் மக்களுக்கு—அவர்கள் விடுதலையின் மூலம் நலம் செய்வதான நிலையில், இருப்பினும், அத் தீர்வுக்கான வழியாகத் தாங்கள் எந்த நடைமுறையையும் வகுத்துக் கூறிடவில்லை என்பது ஒரு குறைபாடே"—என்றும்,

"அக்குறையே நம் இயக்கம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தை ஒரு நிலைக்குத்தாக நிறுத்தியது. இயங்கக் கூடிய ஓர் இயக்கமே

மக்கள் நடுவில் நன்கு செழித்து வளர முடியும். மக்கள் நடுவில் நன்கு செழித்து வளர்வதின் மூலமே நன்கு பணியாற்றிடத் தொண்டர்கள் கிடைப்பார்கள் என்பது மறுக்க இயலாதது'' என்றும்,

"ஆக மக்கள் நடுவில் நம் இன, மொழியின் அடிமைத தனத்தைப் பற்றியோ, பொதுவான நிலையில் நம் இனம், ஆண்ட இனம், மீண்டும் ஆள நினைக்கிறது என்பதுமான கருத்துகள் பற்றியோ, நம் இயக்கம் கால் கோள முடியாது. அதற்கான காலம் தி.மு.க வின் தோற்றத்திற்கு முன்பாகவே முடிந்து விட்டது. இன்றைக்கு இருக்கக் கூடிய தமிழ்க் குமுகத்தின் பொருளியல், குமுகவியல் அடிமைத் தனங்களைத் தெள்ளத் தெளிவாகக் கூறுமல், நம்மினம் ஈடேறுவது என்பதே அரிது. இத் தெளிவில் நம் இயக்கம் ஒரு சரியான கொள்கையைக் கூட வைக்கவில்லை.—'' என்றும் பலவாறு எழுதியிருக்கிறுய்.

இவற்றிற்கான விளக்கங்களை மிகச் சுருக்கமாகக் கீழே குறிக்கிறேன். அவை முழு விளக்கங்கள் ஆகாமற்போயினும், அவற்றிற்கு அடித்தளமானவை. இனி, எல்லா விளக்கங்களையுமே இம் மடல் வழியாக விளக்கி விடுவது இயலாததன்றே?

ஓர் அடிப்படை உண்மையை நீ விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு மலைக்குப் போகாமல், அதில் உள்ள குன்றை நாம் எட்டி விட முடியாது; அந்தக் குன்றை எட்டாமல், அதில் உல்ள ஒரு குவட்டை நாம் எட்டி விடுவதும் இயலாது; அந்தக் குவட்டை எட்டாமல் அதில் வளர்ந்துள்ள ஒரு மரத்தை எட்டி விடவோ முடியாது; இனி, அந்த மரத்தில் ஏருமல் அதிலுள்ள ஒரு கிளையை நாம் அணுக முடியாது; அந்தக் கிளைக்குப் போகாமல் அதன் நுனிக்குப் போய் விட இயலாது; அந்த நுனியை நெருங்காமல், அதில் காய்த்துக் கனிந்து தொங்கும் ஒரு கனியைப் பறித்து விட முடியாது.

இங்கு, கனி பறிப்பது நம் நோக்கம் என்பதாக வைத்துக் கொண்டால், முதலில் நாம் கனியை எப்படிப் பறிப்பது என்று பேசி என்ன பயன்? முதல் பணி நாம் மலையை நோக்கிப் போவதும், அடுத்த பணி அந்த மலையில் உள்ள குன்றுக்கு ஏறிப் போவதும், அதற்கு அடுத்த பணி அந்தக் குன்றின் மேல் அமைந்த குவட்டில் ஏறுவதும், அதற்கும் அடுத்த பணி, அந்தக் குவட்டில் உள்ள மரத்தில் ஏறிப் போகும் திட்டமும், அதன் மேலும் உள்ள பணி, அக் கனி தொங்கும் கிளையில் ஏறி முயல்வதுமாக அமைந்து, இறுதிப் பணியாக—திட்டமாக- அக் கனியைப் பறிப்பதுமாகவே அமைய முடியும்,

இங்கு நாம் பறிக்கப் போவது வெறுங் கனியாக இல்லாமல், விடுதலைக் கனியாக வைத்துக் கொண்டால், நம் பணியும் திட்டமும் முதலில் கூறியவாறு, படிப்படியாகத் தானே அமைய முடியும்?

(தொடரும்)

---

**ஆட்சியிலிருப்பவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கட்டுக்காவலும், கண்காணிப்பும் மிகுதியும் இருப்பது, அரசுக்கும் மக்களுக்கும் போதுமான இணக்கமில்லை என்பதையே உறுதி செய்கிறது!**

---

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 49**

***அமைதியிலிருந்துதான் புரட்சி வெடிக்கும்! எரிமலை அதற்குச் சான்று! ஆரவாரம், ஆர்ப்பாட்டம் புரட்சியை உண்டாக்குவதில்லை. கடலலைகளே அதற்குச் சான்று!***

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 132.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

5. அருணுசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண். 847829;

உறுப்பினர் :

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

தமிழன் ஒவ்வொருவனும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனுர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணுசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657